Public Service Announcement

# வாகனின் கலாச்சார தினங்களின் கொண்டாட்டத்தில் ஈடுபடுபடுவதற்கான காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது!

*ஜூன் 12ஆம் தேதிக்குள் உங்கள் ஆர்வ வெளிப்பாட்டைச் சமர்ப்பியுங்கள்*

**வாகன், ஒன் (ஜூன் 2, 2025)** – இந்த இலையுதிர்க் காலத்தில் வாகனின் வருடாந்திர விருதுபெற்ற கலாச்சார தினக் கொண்டாட்டத்தில் பங்கெடுக்க அனைத்துக் கலைஞர்கள், படைப்பாளிகள், உள்ளூர் அமைப்புகள், வணிகங்களை வாகன் நகரம் அழைக்கிறது!

ஆர்வ வெளிப்பாட்டுப் படிவத்தைச் **சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு வியாழக்கிழமை, ஜூன் 12, நள்ளிரவு 11:59 வரையிலும்** நீட்டிக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை, செப். 19 முதல் ஞாயிறு, அக். 12 வரை இடம்பெறும் கலாச்சார தினங்களில் உங்கள் சமூகத்தில் இலவச பொது நிகழ்ச்சிகள் அல்லது செயல்பாடுகளை ஏற்பாடு செய்யுங்கள்.

ஒவ்வோர் ஆண்டும், குடியிருப்போர் அனுபவிப்பதற்காக உள்ளடக்கிய நிகழ்ச்சியை வழங்குவதற்காக நூற்றுக்கணக்கான கலைஞர்களும் ஏற்பாட்டாளர்களும் இந்த மூன்றுவார விழாவில் பங்குபெறுகின்றனர். தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக, ஒன்டாரியோ கலாச்சார நாட்களுக்கான விழா மையமாக வாகன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மாகாணத்திலுள்ள 12 பிற சமூகங்களுடன் இணைகிறது. பல்வேறு கலைவடிவங்கள், இசை, நடனம், இலக்கியத்தை வாகனில் கண்டறியும் அதே வேளையில், இந்த நகரம் கலச்சாரப் புரிதலை போஷிப்பதையும் உள்ளடக்கும் தன்மையை வளர்த்தெடுப்பதையும் தொடர தனித்துவமான வாய்ப்பினை இது வழங்குகிறது.

கலாச்சார தினங்களுக்குத் தகுதி பெற, ஒரு நிகழ்வானது:

- ஒன்டாரியோ கலாச்சார தினங்களால் வழங்கப்படும் தேதிகளுக்குள் இடம்பெற வேண்டும்.
- மெய்நிகராக அல்லது நேரடியாக இருக்கவேண்டும்.
- கலை, கலாச்சாரம் அல்லது பாரம்பரிய அம்சம் இருக்க வேண்டும்.
- செயல்முறை சார்ந்ததாக, பங்கெடுக்கக்கூடியதாக அல்லது திரைகளுக்குப் பின்னால் உள்ளதாக இருக்கவேண்டும்.

# Public Service Announcement

- கலந்துகொள்பவர்களுக்கு இலவசமாகவோ அல்லது முடிந்ததைச் செலுத்தக்கூடியதாகவோ இருக்க வேண்டும்.
- கலைஞர்களுக்கு நியாயமான இழப்பீடு இருக்க வேண்டும்.
- அணுகக்கூடியதாக, உள்ளடக்கியதாக, பன்முக நிகழ்வை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும்.

**உங்களுக்கு இதில் என்ன உள்ளது?**

- இலவச விளம்பரப் பொருட்கள் மற்றும் அடையாளங்கள்
- ஊக்கச் சலுகையில் உதவி
- நமது சிறப்பு வாகன் கலாச்சார தினங்கள் இணையப் பக்கத்தில் ஓர் இடம்
- பிற கலைஞர்கள் மற்றும் நகர வெளிகளுடன் தொடர்புகள்
- நகரத்துக்குச் சொந்தமான இடங்களில் இலவச இடங்களைப் பெறும் வாய்ப்பு
- வாகனின் கலாச்சார தினங்களின் "மைய நிகழ்வில்" பங்குபெறும் வாய்ப்பு!
- கலைஞர் கட்டணமாக கலைஞர்கள், சமூகம் மற்றும் இலாப நோக்கற்ற குழுக்கள் $100 வரை மதிப்பூதியமும் ஆதரவுச் செயல்பாட்டு தளவாடங்களுக்காகக் கூடுதலாக $100-உம் பெற விண்ணப்பிக்கலாம்.

மேலும் அறிய, வருகை தாருங்கள் vaughan.ca/**culture**.

உடனுக்குடன் செய்திகளைப் பெற, வாகன் நியூஸுக்கு சந்தாதாரர் ஆகுங்கள். அதிகாரப்பூர்வ கார்பரேட் சேனல்களைப் பின்தொடர: X, Facebook, Instagram, LinkedIn.

-30-

**வாகன் குறித்து:** வாகன் நகரம் 344,412க்கும் மேற்பட்ட மக்கள்தொகையுடன் கனடாவின் மிக வேகமாக வளர்ந்துவரும் நகரங்களுள் ஒன்று. 1991இல் தொடங்கப்பட்ட வாகனில் கான்கார்டு, கிளெய்ன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில், வுட்பிரிட்ஜ் போன்ற சமூகங்கள் அடங்கும். கலாச்சார பன்முகத்தன்மை கொண்ட நகராட்சியானது யார்க் பிராந்தியம் மற்றும் டொரண்டோ பெரும்பாகப் பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடகத் தொடர்பு:** வாகன் நகரம்
Communications, Marketing and Engagement Department
905-832-2281 | corpcomm@vaughan.ca